**இனிமையான குழந்தைகளே ! ஒரு ஈஸ்வரனிடம் உண்மையான அன்பு வைக்க வேண்டும். இந்த இந்திர சபையில் நல்ல தகுதியான குழந்தைகளைத் தான் அழைத்து வர வேண்டும். கெட்ட குழந்தைகளை அழைத்து வரக் கூடாது.**

கேள்வி: 21 பிறவிகளுக்கு மிகப் பெரிய லாட்டரியை அடைவதற்கு என்ன முயற்சி செய்துக் கொண்டே இருக்க வேண்டும் ?

பதில்: ஒரேயொரு பரலௌகீக பிரியதர்ஷனை நினைவு செய்துக் கொண்டே அவருடைய ஸ்ரீமத்படி நடப்பதற்கான முழு முயற்சி செய்ய வேண்டும். ஒரு வேளை யாருடைய பெயர் ரூபத்திலாவது புத்தி மாட்டிக் கொண்டிருந்தால் அங்கிருந்து புத்தியின் நினைப்பை விலக்கிக் கொண்டே செல்லுங்கள். இரவில் நேரம் கிடைக்கும் போது அன்போடு தந்தையை நினையுங் கள், தெய்வீக குணங்களை கடைபிடித்தால் 21 பிறவிகளுக்கு லாட்டரி கிடைத்து விடும்.

பாடல்: அவர் நம்மை விட்டு பிரிய மாட்டார்.....

ஓம் சாந்தி. துக்கம் இங்கே தான் இருக்கிறது. தந்தை துக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக வந்திருக்கிறார். ஏனென்றால் கிருஷ்ணர் இங்கே வர முடியாது என குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய உலகத்தில் துக்கம் கிடையாது. கம்ச புரியில் தான் துக்கம் ஏற்படுகிறது. கிருஷ்ணபுரி மிக உயர்ந்த தேவதைகளின் உலகம் ஆகிவிட்டது. நாம் இப்போது தெய்வீக குணங்களைக் கடைபிடிக்கக் கூடியவர்களாக மாறியிருக்கிறோம். ஒரு வேளை அசுர குணங்கள் இருந்துக் கொண்டே இருந்தால் தெய்வீக சம்பிரதாயத்தில் நல்ல பதவி பெற முடியாது. இப்போது பதவி கிடைக்கவில்லை என்றால் ஒவ்வொரு கல்பத்திலும் கிடைக்காது. மிகப் பெரிய நஷ்டம் ஏற்படும். அந்த லாப நஷ்டம் ஒரு பிறவிக்கு ஏற்படுகிறது. இதுவோ பல பிறவிகளின் விஷயமாகும். நல்ல கெட்ட கர்மங்கள் இருக்கிறது அல்லவா. சத்யுகத்தில் நல்ல செயல்கள் மட்டும் நடக்கிறது. கெட்ட கர்மங்களை செய்விக்கக் கூடிய இராவணன் அங்கே கிடையாது. இங்கே யார் எப்படிபட்ட செயல்களை செய்கிறார்களோ அவர்களுக்கு 21 பிறவி களுக்கு அதனுடைய பலன் கிடைக்கும். ஒன்று ஸ்ரீமத்படி நடக்க வேண்டும் அல்லது அசுர வழிப்படி நடக்க வேண்டும். தீய வேலைகளை செய்கிறார்கள் என்றால் அசுர வழிப்படி நடக் கின்றனர். உடனே தெரிந்து விடுகிறது. பாபாவிடம் முழுமையாக அன்பு வேண்டும் அல்லவா? ஈஸ்வரனிடம் அன்பு இல்லை என்றால் அசுரர்களிடம் அன்பு இருக்கின்றது. இங்கே உங்களுக்கு ஈஸ்வரனிடம் அன்பு கிடைத்திருக்கிறது. ஈஸ்வர் பாபா என்கிறீர்கள். நாங்கள் உங்கள் ஒருவரிடமே அன்பு வைப்போம் என உறுதி மொழி எடுக்கிறார்கள். பிறகு வேறு யாரிடமாவது அன்பு வைத்தீர்கள் என்றால் அசுரரிடம் வைப்பது போன்றதாகும். பிறகு தானும் அசுரராகி விடுவர். இந்திரனின் சபையில் தேவதை விகாரியை தன்னுடன் உடன் அழைத்து வந்து விட்டார். அவர் நல்ல பிள்ளை இல்லை. கெட்ட விகாரியாக இருந்தால், இருவரையும் தூக்கி எரிந்து விட்டனர். இவ்வாறு கதை கூறுகிறார்கள் அல்லவா? ஞானம் முழுமையாக இல்லாத காரணத்தால் இப்படிப் பட்டவர்களை அழைத்து வருகிறார்கள். அவர்கள் தூய்மையாக இருக்க முடியாது. அவர்களை அழைத்து வரக் கூடிய பி.கே களும் சாபம் அடைகின்றனர். அது சாபம் தான். இது ஈஸ்வரனின் ஞான இந்திர சபையாகும்.

ஞான மழையைப் பொழிய வைக்கக் கூடியவர் ஒரே ஒரு தந்தை தான். எனவே இங்கே மிகவும் புரிந்துக் கொண்டு மற்றவர்களை அழைத்து வர வேண்டும். இல்லை என்றால் அழைத்து வரக் கூடியவர்களுக்கு சாபம் கிடைத்து விடும். நீங்கள் ஆன்மீக வழி காட்டி. நீங்கள் பரமாத்மாவிடம் அழைத்து வருகிறீர்கள் என்றால் மிகவும் எச்சரிக்கையோடு அழைத்து வர வேண்டும். இங்கே சந்திப்பதற்காக பலர் வருகிறார் கள். பலரை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எவ்வளவு மனிதராக இருந்தாலும் தூய்மை யாக இல்லாவிட்டால் எதிரில் வர முடியாத காலமும் வரும். இப்போது அப்படி செய்தால் கஷ்டமாகி விடும். குறிக்கோள் மிகவும் உயர்ந்தது. எத்தனை ஆசிரமங்கள் மற்றும் சத்சங்கங் கள் உள்ளன. அங்கு எங்கேயும் குறிக்கோள் கிடையாது. இவைகளால் நமக்கு என்ன லாபம் இருக்கிறது. எதுவும் தெரியவில்லை. இங்கேயோ பெரிய எழுத்துக்களில் குறிக்கோள் எழுதப் பட்டிருக்கிறது. மனிதனிலிருந்து தேவதையாக வேண்டும். மனிதனிலிருந்து தேவதையாக...... என சீக்கிய மக்கள் பாடுகிறார்கள். சத்யுகத்தில் தேவதைகள் இருப்பார்கள். எனவே நிச்சயமாக மனிதனிலிருந்து தேவதையாக மாற்றக் கூடியவர் பகவானாகத்தான் இருப்பார். பகவான் எவ்வாறு மாற்றுகிறார். பகவான் மற்றும் பகவதி. ஆனால் நாம் தேவி தேவதா என்கிறோம். ஏனென்றால் பகவான் ஒருவரே. பிரம்மா, விஷ்ணு, சங்கரர் கூட சூட்சம வதன வாசிகள் ஆவர். லஷ்மி நாராயணன் தெய்வீக குணங்களை உடைய மனிதர்ந்ஹக அவர்ந்ஹக தெய்வீக குணங்களை உடையவர்கள். அசுரகுணங்களில் நிச்சயம் மீண்டும் வருவார்கள். இப்போது பிரம்மா மூலமாக ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. நான் தூய்மையற்ற உலகத்தில் தூய்மையற்ற உடலில் வருகிறேன் என பாபா கூறு கிறார். இவர் தனது வம்சத்துடன் முழுமையாக 84 பிறவிகளை எடுக்கின்றார், தூய்மைற்றவர்களை தூய்மையாக மாற்றக் கூடியவர் அவர். கிருஷ்ணர் தூய்மையற்றவர்களை எப்படி தூய்மையாக மாற்றுவார். கிருஷ்ணர் அந்த பெயர் ரூபத்தில் ஒரு முறை தான் வருவார். அவருடைய அந்த வடிவம் மீண்டும் 5000 வருடங்களுக்குப் பிறகு கிடைக்கும். மற்ற பிறவிகளோ வெவ்வேறாக இருக்கும். இவர்களே லஷ்மி நாராயணன், யார் ஜெகதம்பா ஜெகத் பிதாவாக இருக்கிறார்களோ இவர் களுக்கு நாம் அடுத்த பிறவியில் இவ்வாறு மாறுவோம் எனத் தெரிகிறது. இப்போது இருக்கக் கூடிய தோற்றம் மாறி விடும். இப்போது நீங்கள் வதனத்திற்குச் சென்று பார்க்கலாம். எனவே சத்யுகத்தில் லஷ்மி நாராயணனின் தோற்றம் எப்படி இருக்கும். நீங்கள் இச்சமயம் சாட்சாத் காரம் செய்ய முடியும். இது அதிசயமாக இருக்கிறது. வேறு யாருக்கும் சாட்சாத்காரம் கிடைக் காது. நீங்கள் இவர் ஒருவரை துல்லியமாகப் பார்க்க முடியும். ஆனால் அந்த நிழற்படத்தை இங்கே எடுத்து வர முடியாது. இந்த நிழற்படங்களை இங்கே தான் உருவாக்கி இருக்கிறார்கள். எதிர்காலத்தில் இவ்வாறு மாறுவோம் என நீங்கள் அறிகிறீர்கள். குருநானக்கின் சரியான சித்திரம் எது இருந்ததோ அது 5000 வருடத்திற்கு பிறகு கிடைக்கும். இந்த விஷயங்களை நீங்கள் தான் அறிகிறீர்கள். இப்படிப்பட்ட தந்தையுடன் யோகா மிகவும் நன்றாக இருக்க வேண்டும். மேலும் தூய்மையான யோகா வேண்டும் வேறு யாருடைய பெயர் ரூபத்திலும் அன்பிருந்தால் தூய்மை அற்றதாகி விடுகிறது. சிவபாபாவின் பக்தி ஆரம்பம் ஆகும் போது முதலில் அதற்குத் தூய்மையான பக்தி என்று கூறப்படுகிறது. சிவனைத் தான் பூஜிக்கிறார்கள். இப்போது மீண்டும் ஒரு சிவபாபாவை நினைக்க வேண்டும் கடைசியில் உங்களுடைய புத்தி இணைப்பு தூய்மையற்றதாகும் படி இருக்கக் கூடாது என பாபா கூறுகின்றார். எங்கேயாவது பெயர் ரூபத்தில் மாட்டிக்

கொண்டிருந்தால் புத்தியை விலக்கிக் கொண்டே செல்லுங்கள் மாயை இப்படிப்பட்டது. எப்போதாவது எங்காவது சிக்க வைத்து விடுகிறது. சில நேரங்களில் நண்பர்கள் உறவினர்கள் நினைவிற்கு வருவார்கள். உடனடியாக யோகத்தை செய்யலாம் என்றால் முடியாது. இப்போது யாரும் முழுமையாக வில்லை என்று பாபா கூறுகின்றார். இது மிகப் பெரிய 21 பிறவிகளுக்கான லாட்டரி ஆகும். இதில் மிகவும் நன்றாக முயற்சி செய்ய வேண்டும். மாயை மிகவும் வலிமை வாய்ந்தது. உடனடியாக மறக்க வைத்து விடுகிறது. இதுவும் நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எனவே நினைப்பதற்கு இரவில் முயற்சி செய்யுங்கள். பகலில் நேரம் கிடைப்பதில்லை. இரவில் பரலோக பிரியதர்ஷனை நினையுங்கள். ஸ்ரீமத்படி நடந்தால் உயர்ந்தவர்கள் ஆகிவிடுவீர்கள். இப்போது மிக உயாந்த கிருஷ்ணர், அவரை கீதையின் பகவான் என கூறப்பட்டிருக்கிறது. உயர்ந்தவராக மாற்றக் கூடியவரை மறைத்து விட்டனர். கிருஷ்ணருடைய குணத்தையும் பரமபிதா பரமாத்மாவின் குணத்தையும் நிச்யமாக வர்ணணை செய்ய வேண்டும் அப்போது சர்வ வியாபி என்ற விஷயம் விலகி விடும். இது சங்கமயுகம் ஆகும். இதற்கு மங்களமான கல்யாணகாரி யுகம் என கூறப்படுகிறது. சத்யுகத்தையோ, கலியுகத்தையோ மிக உயர்ந்தது என்று கூற முடியாது எது நன்மை தருகிறதோ அதைத் தான் மிக உயர்ந்தது என்று கூறப்படுகிறது. சத்யுகமோ கல்யாணகாரி தான். அதற்கு முன்பாக அகல்யாணகாரியுகம் (தீமையான யுகம்) இருந்தது. எனவே மகிமைகள் அனைத்தும் சிவபாபா அவதாரம் செய்யக் கூடிய சங்கமயுகத்திற்கே உள்ளது,. நான் கல்பத்தின் சங்கமயுகத்தில் வருகிறேன் என பாபா கூறுகிறார். கல்பம் முடிகிறது. பிறகு புதியது ஆரம்பம் ஆகிறது. பழைய கல்பத்தில் கலியுகம் மற்றும் புது கல்பத்தில் சத்யுகம். இதுவோ கல்பத்தின் சங்கமயுகம் ஆகும். அவர்களோ ஒவ்வொரு யுகத்திலும் என கூறிவிட்டனர். சரி, சத்யுகம் மற்றும் திரேதாவின் சங்கமம், திரேதா மற்றும் துவாபர யுகத்தின் சங்கமம், துவாபர் மற்றும் கலியுகத்தன் சங்கமம், பிறகு கலியுகம் மற்றும் சத்யுகத்தின் சங்கமம் என நான்கு சங்கமம் ஆகிவிட்டது. எனவே அவதாரங்கள் கூட 4 முறையாக இருக்க வேண்டும். பிறகு ஏன் 24 அவதாரங்கள் என்று கூறுகிறார்கள். இந்த விஷயங்கள் அனைத்தும் தாரணை செய்ய வேண்டியவைகள் ஆகும்.

பாபா மிகவும் எளிய முறையில் பரம்பிதா பரமாத்மாவுடன் உங்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது என எழுத வைத்திருக்கிறார். பரம்பிதா என்கிறோம் என்றால் நிச்சயமாக இரண்டு தந்தையர் இருக்கிறார்கள். படக் கண்காட்சிகளில் அனைவரும் நிறைய புரிய வைக்கிறார்கள். ஆனால் யாரும் இவ்வளவு புரிந்துக் கொள்வதில்லை. ஒருவருக்கு கூட நிச்சயம் ஏற்பட வில்லை. வருவார்கள் முரளி கேட்பார்கள். ஆனால் அவர் நம்முடைய தந்தை, அவரிடமிருந்து ஆஸ்தி அடைய வேண்டும, ஸ்ரீமத்படி நடக்க வேண்டும் இந்த வி^யங்கள் புத்தயில் பதிவதில்லை. 1000 பேர் வந்தனர். ஆனால் ஒருவருக்கு கூட அவர் நம்முடைய தந்தை, அவருடைய வழிப் படி நடக்க வேண்டும் என்ற நிச்சயம் இல்லை. முதலில் தாய் தந்தையின் முகத்தை பார்க்க வேண்டும். ஆனால் நிச்சயம் இல்லை. மாயை மிகவும் வலிமையானது. இந்த வலிமையான மாயாவிடமிருந்து விடுவிப்பதில் மிகவும் கடின உழைப்பு தேவைப் படுகிறது. சத்குருவை நிந்தித்தால் பதவி அடைய முடியாது என பாபா கூறுகிறார். ஒருவேளை கெட்ட நடத்தை இருந்தால் பதவி பெற முடியாது. இங்கேயோ குறிக்கோள் தெளிவாக இருக்கிறது. அரைக் கல்பம் பக்தி மார்க்கம் நடக்கிறது.

அது இறங்கும் கலையாகும். குருவின் பெயரைக் கூறுவதால் ஏறும் கலை அடைகிறோம் என பாடுகிறார்கள். ஆனால் எந்த குரு? சத்குரு. நீங்கள் சத்குருவை அறிகிறீர்கள். அவரே சிவபாபா, சத்தியமான பாபா, சத்தியமான டீச்சர், சத்குரு. சிவபாபாவை நினைவு செய்வதால் ஏறும் கலை ஏற்படுகிறது. 16 கலைகள் உடையவர் ஆகின்றோம். பிறகு 16 கலைகளில் இருந்து இறங்க வேண்டும். நாங்கள் இவைகளில் இருந்து விடுபட விரும்புகின்றோம் என மனிதர்கள் கூறுகிறார்கள். ஆனால் விடு பட முடியாது. ஏறும் கலை, இறங்கும் கலை. பிறகு ஏறும் கலை மிக உயர்ந்ததிலிருந்து உயர்ந்த, மத்திய, கீழான, மீண்டும் கீழானதலிருந்து மிக உயர்ந்த..... இந்த சக்கரத்தில் சுழல வேண்டும். ஒவ்வொருவரும் இந்த சக்கரத்தில் வர வேண்டும். நீங்கள் முழு சக்கரத்திலும் வருகிறீர்கள். அவர்கள் சிறிதளவு தான் சக்கரத்தில் வருகிறார்கள். உயர்ந்த, மத்திய, கீழான நிலைக்கு வந்துதான் ஆக வேண்டும். குழந்தை பருவத்திற்கு மிக உயர்ந்த நிலை என்று கூறப்படுகிறது. பிறகு சிறிது பெரியவர் ஆனதும் உயர்ந்த நிலை, இளைஞர்களுக்கு மத்திய நிலை, வயதானவர்களுக்கு கீழான நிலை என்று கூறுவார்கள். ஒவ்வொருவருக்கும் சுக துக்கத்தின் நடிப்பு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாடகம் மிகவும் அதிசயமாக இருக்கிறது. இதை யாரும் அறியவில்லை. இராயல் வீட்டில் உள்ள குழந்தைகளின் நடத்தை மிக நன்றாக இருக்கிறது. இங்கேயோ ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். அனைவரும் ஒன்று போல நடக்க முடியாது. வேலைகாரன் வேலைக்காரியாக மாறுதல், மூன்றாம் வகுப்பு ராஜா ராணி ஆகுதலை காட்டிலும் பிரஜைகளில் பணக்காரராக மாறுவது நல்லது என பாபா புரிய வைக்கிறார். தான புண்ணியம் செய்து பணக்காரர் ஆகிவிடலாம். வேலைக்காரன் வேலைக்காரி என்ற பெயர் இருக்காது. அவர்கள் வேலைக்காரன் வேலைக்காரி ஆகி இராஜ்யத்தில் செல்கிறார்கள். ஆனால் இவர்களை விட அவர்கள் நிறைய சுகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைக்காரன் வேலைக்காரி என்று பெயர் கிடையாது. பிரஜைகளில் மிகவும் பணக்காரர் ஆகிவிடுவர். இங்கிருந்துக் கொண்டு ஒருவேளை ஸ்ரீமத்படி நடக்கவில்லை என்றால் வேலைக்காரன் வேலைக்காரி ஆகி விடுகின்றனர். இங்கே இருந்துக் கொண்டு தீய வேலைகளைச் செய்தால் வேலைக்காரிக்கும் வேலைக்காரி ஆகிவிடுவார்கள். சிலர் நல்ல வேலைக்காரியாக இருப்பர். சிலரோ மதிப்பற்றவராக இருப்பார்கள். எனவே மிகவும் நன்றாக முயற்சி செய்ய வேண்டும். ஆகவே குழந்தைகளே சான்றிதழ்களை அனுப்புங்கள் என பாபா எழுதுகிறார். பலர் தனக்கு அனைத்தும் தெரியும் என நினைத்துக் கொண்டு அமர்கிறார்கள். பிறகு எச்சரிக்கை செய்வதற்கு யார் ரிப்போர்ட் செய்வார்கள். பாபாவின் வேலை புரிய வைப்பதாகும். குறிக்கோள் முழுமையாக இருக்கிறது. யார் வேண்டுமானாலும் முயற்சி செய்யுங்கள். வெற்றி மாலையில் வந்து காட்டுங்கள். 8 மணி மாலையும் இருக்கிறது. 108 மணிமாலையும் இருக்கிறது. 16108 மணி மாலை கூட இருக்கிறது. விகாரமற்ற உலகத்தின் இராஜா இராணி சிலரே இருப்பார்கள். பிற்காலத்தில் நிறைய பேர் ஆகி விடுகிறார்கள். பாரதத்தில் அனைவரையும் விட அதிகமாக இருப்பார்கள். எத்தனை கிராமங் கள் உள்ளன. எத்தனை இராஜா, இராணி பிறகு அவர்களுடைய எத்தனை இளவரசன் இளவரசிகள், எவ்வளவு பேர் இருக்கிறார்கள். பெரிய பட்டியல் எடுக்கிறார்கள். மகாராஜா இராஜா பிறகு அவர்களின் குடும்பத்தினர். டைரக்டரியில் முக்கிய மான பெயரைப் போடுகிறார்கள். அங்கேயோ ஒரேயொரு குழந்தை தான் இருப்பார். மிகப் பெரிய நீண்ட கணக்கு இருக்கிறது. எல்லையற்ற தந்தையை நினையுங்கள்.

அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது என பாபா கூறுகின்றார். இல்லறத்தில் இருக்க வேண்டும். இது தூய்மையான இல்லறமார்க்கம் ஆகும். சில மனிதர்கள் ஈஸ்வரனே அறியாத காரணத்தால் தன்னையே ஈஸ்வரன் என நினைத்தக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். பிறப்பு இறப்பில் வந்துக் கொண்டு இருக்கிறார்கள். அகால மரணமும் ஏற்பட்டுக் கொண்டி ருக்கிறது. மேலும் ஈஸ்வரன் என கூறிக் கொண்டும் இருக்கிறார்கள். தேவதைகள் ஒருபோதும் அகால மரணம் அடைவதில்லை என நீங்கள் அறிகிறீர்கள் எப்போது நேரம் முடிவடைகிறதோ அப்போது காட்சிகள் கிடைக்கிறது. இப்போது பழைய உடலை விட்டு விட்டு புதியதை எடுக்க வேண்டும். மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். ஒரு பாபாவை மட்டும் நினைக்க வேண்டும் வேறு யாருடைய பெயர் ரூபத்திலும் மாட்டிக் கொள்ளக் கூடாது. இல்லை என்றால் விழுந்து விடுவீர்கள். பாபா பல்வேறு விதமாக தூக்கி விட வேண்டி யிருக்கிறது. இவருக் குள்ளோ சிவபாபா வந்திருக்கிறார். இவரிடம் போட்டி போடக் கூடாது. மாயை நிறைய புயலைக் கொண்டு வருகிறது. அனுமான் போன்று உறுதியாக இருக்க வேண்டும். அப்போது மாயா இராவணன் அசைக்க முடியாது. ஆதிதேவனை மகாவீர், அனுமான் என கூறுகிறார்கள். பெயர் வைத்து விட்டனர். குழந்தை களில் சிலர் மகாரதிகளாக இருக்கிறார்கள். இங்குள்ள விஷயங்கள் தான் நடைமுறையில் உள்ளது, யாருக்கு ஞானத்தின் மாலிஷ் ஆகவில்லையோ அவர்கள் வாடிப்போன மலர்கள் போன்று தென்படுகின்றனர். ஞானத்தின் மாலிஷால் லஷ்மி நாராயணனை பாருங்கள் எவ்வளவு இரமணிகரமாக இருக்கிறார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தனது குறிக்கோளை எதிரில் வைத்து உயர்ந்த பதவி அடைய முயற்சி செய்ய வேண்டும். நடத்தை மிகவும் இராயலாக இருக்க வேண்டும். மேலும் ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

2. எந்த தேகதாரியின் பெயர் ரூபத்தையும் நினைக்க கூடாது. ஒரு பாபாவின் தூய்மையான நினைவில் இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

வரதானம் : தனது சக்திசா-யான மனோ சக்தியின் மற்றும் சுப பாவணையின் மூலம் எல்லையற்ற சேவை செய்யக் கூடிய உலகை மாற்றுபவர் ஆகுக.

உலக மாற்றத்திற்கு சூட்சுமத்தில் சக்திசா- ஸ்திதி உடைய ஆத்மாக்கள் தேவை. அவர்கள் தங்களது விருத்தியின் மூலம், சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் அநேக ஆத்மாக்களை மாற்றி விட முடியும். எல்லையற்ற சேவை சக்திசாலியான மனோ சக்தியின் மூலம், சுபபாவணை மற்றும் சுப விருப்பத்தின் மூலம் ஏற்படும். தன் மீது மட்டும் உயர்ந்த எண்ணமுடையவர்களாக இல்லாமல் மற்றவர்களையும் சுப பாவனை, சுப விருப்பத்தின் மூலம் பரிவர்த்தனை செய்யுங்கள். எல்லையற்ற சேவை அல்லது உலக சேவை சமநிலையில் இருக்கும் ஆத்மாக்கள் தான் செய்ய முடியும். எனவே

பாவணை மற்றும் ஞானம், அன்பு மற்றும் யோகா இதில் சம நிலையின் மூலம் உலகை மாற்றுபவர்களாக ஆகுங்கள்.

சுலோகன்: புத்தி என்ற கை பாப்தாதாவின் கைகளின் மீது வைத்து விட்டால் சோதனைகள் என்ற கடலில் அசைந்து விடமாட்டீர்கள்.

அன்பில் லயித்திருக்கும் நிலையை (லவ்லின் ஸ்திதி) அனுபவம் செய்யுங்கள்.

மனம் பாபாவினுடையது எனும் போது பிறகு மனதை எப்படி ஈடுபடுத்துவது? அன்பு எப்படி செலுத்துவது? என்ற கேள்வியே எழ முடியாது. ஏனெனில் சதா அன்பில் மூழ்கி இருப்பர். அன்பு சொரூபமாக, மாஸ்டர் அன்புக் கடலாக ஆகிவிடுவர். ஆக அன்பு செலுத்த வேண்டியிருக்காது, அன்பு சொரூபமாக ஆகிவிடுவர். எந்த அளவிற்கு ஞான சூரியனின் கிரணங்கள் அல்லது ஒளி அதிகரிக்கின்றதோ, அதே அளவிற்கு அன்பின் அலைகள் எழும்பிக் கொண்டிருக்கும்.